இணைப்பு II.

(80 ஆம் பக்கத்தில் 250 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள மதுரா சர்க்கரை ஆலை, அருணா சர்க்கரை ஆலை தென்னிந்தியா சர்க்கரை ஆலை மற்றும் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை ஆகிய நான்கு ஆலைகள், 1973–74ஆம் பருவத்திற்கு தமிழ்நாடு அரசு நிர்ணயம் செய்த கரும்பின் இறுதி விலையை இதுகாறும் செயற்படுத்த முன்வரவில்லை. தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் சங்கத்திடமிருந்து இது குறித்து அரசு தலையீடு மேற்கொள்ள முறையீடுகள் பெறப்பட்டன. 1973–74 ஆம் பருவத்திற்கு அரசு நிர்ணயித்த கரும்பு இறுதி விலையை மேற்கொள்ளுமாறு மேலே குறிப்பிட்ட கரும்பு ஆலை நிர்வாகிகள் வலியுறுத்தப்படுகின்றனர்.

அருணா சர்க்கரை ஆலையைப் பொருத்தளவில், அதன் பங்குதாரர் ஒருவர் நகர சிவில் நீதி மன்றத்தில் இந்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலைக்கு மிகுதியாக தனியார் நிறுவனம் கரும்புவிலை கொடுப்பது எவ்வாறு ஏற்புடையதாகும் என வழக்கு தொடர்ந்துள்ளார். எனினும் அருணா சர்க்கரை ஆலை நிருவாகம், வழக்குத் தொடர்ந்துள்ள பங்குதாருடனும் கரும்பு உற்பத்தியாளர்களுடனும் கூடிப்பேசி இரு சாராருக்கும் திருப்தியான முறையில் ஒரு முடிவு எடுக்க ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது. 30-9–1974 ஆம் நாளுடன் முடிந்த சர்க்கரை ஆண்டு கணக்குகள் முடிவு பெற்றபின் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படும். இதற்கு இன்னும் சுமார் இருவாரகால அளவு தேவைப்படலாம். 1973–74ஆம் பருவத்திற்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்த கரும்பின் இறுதி விலையை அருணா சர்க்கரை ஆலை நிர்வாகம் விரைவில் செயற்படுத்தும் என நம்பலாம்.

TRUTH ALONE TRIUMPHS